# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப. (ஓ),
*************

மனு எண்: 285/ஊராட்சி/2018

ஆணை எண்: 041 /2018

நாள்: 02/03/2018

திருமதி. K. பவானி,
தேவர்திரு நகர்,
நெல்லூர் சித்தரேவு,
திண்டுக்கல்.

– மனுதாரர்

திரு. சிவராசன்,
ஊராட்சி செயலாளர்,
சித்தரேவு முதல் நிலை ஊராட்சி,
திண்டுக்கல் மாவட்டம்.

– எதிர் மனுதாரர்

## ஆணை

திண்டுக்கல் மாவட்டம், தேவர் திருநகர், சித்தரேவு ஊராட்சியில் வசிக்கும் திருமதி. K. பவானி, தனது 26.2.2018 நாளிட்ட கடிதத்தில், சித்தரேவு முதல் நிலை ஊராட்சியில் பணிபுரியும் திரு. சிவராசன் அவர்கள் எவ்விதமான முன்னறிவிப்புமின்றி குடிநீர் குழாய் இணைப்பு எண்.167/–ஐ துண்டித்து அதிகார துஷ்பிரயோகம் செய்துள்ளார். மேலும் குடிநீர் குழாய் இணைப்பிற்கான காப்புத் தொகை செலுத்தியதற்கான ரசீது மற்றும் ஏப்ரல் 2011 முதல் மார்ச் 2016 முடிய தண்ணீர் கட்டணம் செலுத்தியதற்கான ரசீதினையும் இணைத்து, ஊராட்சி செயலர் மீது தக்க நடவடிக்கை எடுக்கக் கோரியுள்ளார்.

2. 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (7)ன்படி “உள்ளாட்சி அமைப்பு” என்பதற்கான பொருளில் “ஊராட்சி மன்றம்” மற்றும் “ஊராட்சி ஒன்றியம்” என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. எனவே மனுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது. எனவே இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் மாவட்டம் அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்ப முடிவு செய்யப்பட்டு, அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும் இப்பொருள் குறித்து திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகுமாறு மனுதாரர் திருமதி. K. பவானி அவர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2018-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 2-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

**பெறுநர்**
திருமதி. K. பவானி,
க/பெ. வீரராஜன்,
96B, 9வது வார்டு, தேவர்திரு நகர்,
நெல்லூர் சித்தரேவு,
திண்டுக்கல் – 624 904.

**நகல்**
மாவட்ட ஆட்சியாளர்,
திண்டுக்கல் மாவட்டம்,
திண்டுக்கல் (இணைப்புடன்)
இருப்பு கோப்பு, PC.